දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ්අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

මගේ අංකය )
எனது இல )
My No. )DMH/ WHO/02/2015

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 2015.09.23
Date )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
சுகாதார,போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
Ministry of Health, Nutrition & Indigenous Medicine

பொது சுற்றறிக்கை இலக்கம் : 01- 31/2015

மாகாண சுகாதாரசேவை பணிப்பாளர்கள்,
பிராந்திய சுகாதாரசேவை பணிப்பாளர்கள்,
போதனா வைத்தியசாலை பணிப்பாளர்கள்,
வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்கள்,
நிறுவனத்தலைவர்கள் அனைவருக்கும்,

## உலக மனநல தினம் - 2015
## "மனநல கண்ணியம்"

உலக மனநல தினம் ஒக்டோபர் 10ம் திகதி கொண்டாடப்படுவதுடன், அன்றைய தினம் மனநலத்துடன் தொடர்புடைய பிரச்சனைகள் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பத்தையும் வழங்குகின்றது. மனநலத்தை மேம்படுத்தல், மனநோய் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்தல், புனர்வாழ்வளித்தல், சிகிச்சையளித்தல் மற்றும் மனநோயினால் ஏற்படும் களங்கம் என்பவை தொடர்பான பிரச்சனைகளை வெளிப்படையாக கலந்துரையாடுவதற்கான ஒரு அரியசந்தர்ப்பத்தை இத்தினம் எமக்கு அளிக்கிறது. இந்தவருடத்தின் தொனிப் பொருள் "மன நல கண்ணியம்"என்பதாகும்.

கண்ணியம் என்பது "மரியாதையுடன் நடத்தப்படுதல்" என பொருள் விளக்கம் அளிக்கப்படுகிறது. இவ்வருடம் கலந்துரையாடப்பட வேண்டிய பிரதான விடயங்கள் மனநல சுகாதார பராமரிப்பு பணியாளர்கள், மனநல சுகாதாரப் பிரிவுகள், மனநிலை கோளாறுகளுடன் உள்ள மக்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் என்பவற்றின் கண்ணியம் பற்றியதாகும். நாட்டில் மனநல சுகாதார பராமரிப்பின் முக்கியத்துவம் பற்றி அரசாங்க மற்றும் அரசசார்பற்ற அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் சமூகத்தினர் என்போரை விழிப்பூட்டுவதன் மூலம் கண்ணியம் பாதுகாக்கப்படவேண்டும். அடையாளப்படுத்தல் மற்றும் பாரபட்சம் காட்டுதல் என்பன தனிநபர்கள் மற்றும் சமூகம் தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்துவதால் கண்ணியம் மீறப்படுவதற்கான சாத்தியத்தை கொண்டுள்ளது. மனநலகோளாறுடன் உள்ளவர்கள் பெரும்பாலும் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்ட குழுவினரில் ஒருவராகவே விளங்குவதுடன் அவர்களுக்கு தொழில் புரிவதற்கு, சுகாதாரசேவைகளை பெறுவதற்கு, அவர்களுடைய சமூகத்தில் கலந்துகொள்வதற்குமற்றும் குடும்பவாழ்வை அனுபவிப்பதற்கு அவர்களது புரிந்துகொள்ளக்கூடிய தன்மை குறைவாக இருப்பது தடையாகவுள்ளது. மனநல சுகாதார பராமரிப்புபணியாளர்கள் மற்றும் சுகாதாரபிரிவுகளின் கண்ணியமானது தொழில்சார்

நிபுணத்துவம்,மனநலசுகாதாரப் பிரிவுகளின் பௌதீகவசதிகள் மற்றும் சுகாதார வசதிகள் என்பவற்றை மேம்படுத்தல்,சுகாதாரபராமரிப்புபணியாளர்களுக்கும் நோயாளர்களுக்கும் இடையிலான நல்லுறவைபேணுதல்,நிர்வாகிகள் மற்றும் மேற்பார்வையாளர்களால் மனநலசுகாதாரப் பணியாளர்களுக்கு உணர்வுபூர்வமாக ஆதரவை வழங்குதல் மற்றும் மனநல சுகாதாரபராமரிப்பு சேவைகளை திட்டமிடுதல் மற்றும் அதனைசரியாக அமுல்படுத்தல் மூலம் பேணப்படுகின்றது.

இம்முறை உலக மனநல தினத்தின் தொனிப்பொருளினை வலியுறுத்துவதற்கு சம்பந்தப்பட்ட சகலதரப்பினரதும் ஆக்கபூர்வமான பங்கேற்புடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்,உமது தகவலுக்காக உலகமனநலதினம் பற்றிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல் ஒன்று இத்துடன் அனுப்பிவைக்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிகவிபரங்கள் அடங்கிய அறிவித்தல் ஒன்று இத்துடன் அனுப்பிவைக்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிகவிபரங்கள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள மனநலவைத்திய நிபுணர்கள், செயல்கருத்து மைய மருத்துவ அலுவலர்கள் (மனநலம்), மனநல பணிப்பாளர் பணிமனை,சுகாதார அமைச்சு என்பவற்றிவிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.

பின்வருவனவற்றிற்குஉரியகவனம் செலுத்துமாறும் நீர் வேண்டப்படுகின்றீர்.

- சகல மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர்கள் மனநலதினம் தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் நடைபெறும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

- மனநலவைத்திய நிபுணர்கள், வைத்திய அலுவலர்கள் (மனநலம்) (செயல் மையம்), வைத்திய அலுவலர்கள் (மனநலம்),சுகாதாரவைத்திய அதிகாரிகள் ஆகியோர் இந்தவருடத்தின் உலகமனநலதின தொனிப் பொருள் பற்ற 'சகல சுகாதார அலுவலர்கள் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இணைந்து செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றனர். பொருத்தமான சுகாதார செய்திகள். சிறிய நூல்கள்,துண்டுப்பிரசுரங்கள் என்பன இது தொடர்பில் தயாரித்து வழங்கப்படவேண்டும்.

- சம்பந்தப்பட்ட இலக்கு தொகுதியினருக்காக நிகழ்சித் திட்டங்களை ஒழுங்குசெய்துநடத்துதல்,அதாவது பாடசாலைகள், சமூக அமைப்புகள்,சிவில் சமூகங்கள் போன்றவற்றுடன் நிகழ்ச்சித் திட்டங்களைநடத்துதல்.

- சுகாதாரவைத்திய அதிகாரிமட்டத்தில்"மனநலகண்ணியம்"எனற தொனிப் பொருளில் ஆகக்குறைந்தது பொருத்தமான ஒரு நிகழ்சித் திட்டத்தையாவது ஏற்பாடு செய்து நடத்துதல் வேண்டும்.

வைத்திய அதிகாரிகள் (மனநலப்பிரிவு) –செயல் மையம் "உலக மனநல தினம்"தொடர்பாக மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட செயற்பாடுகள் பற்றிய விபரமான அறிக்கை ஒன்றை மனநலப் பிரிவு பணிப்பாளர் சுகாதார,போசணை மற்றும் சுதேசவைத்திய அமைச்சுக்கு 2015 நவம்பர் 30 இற்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

டாக்டர்.பி.ஜி மஹிபால
சுகாதாரசேவைகள் பணிப்பாளர் நாயகம்.

**Dr. P. G. Mahipala**
**Director General of Health Services**
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya"
385, Ven. Baddegama Wimalawansa Thero Mw.
Colombo 10.